சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி
அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு. ந. செல்வராஜ், எம்.இ., (Struct)
சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து., (கூ/பொ)

செயல் முறை ஆணை எண்.ப2 / 759/ 2019 /நாள்;:27.06.2019

பொருள் : நியமனம் (நேரடி) – த.நா.அ.ப.தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV– ல் அடங்கி இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட திரு. கா. பெரும்படையன்பிள்ளை, இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை செய்ய ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை : 1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (மற்றும்) தலைமைப் பொறியாளர், (பொது) பொ.ப.து., சென்னை செயல்முறை ஆணை எண். எஸ்3(3)/25366/2019/ நாள், 25.02.2019.

2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். ப2/759/2019/நாள்: 08.03.2019.

--------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நடத்தப்பட்ட 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 –ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV– ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை (1) –ல் காணும் செயல்முறை ஆணையின்படி, இவ்வட்டத்திற்கு பணியமர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திரு. கா. பெரும்படையன்பிள்ளை, இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிகள் தமிழ்நாடு மாநில அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 –ல் விதி 28(1)–ன் படி இவர் பணிமேற்கொண்ட நாளான 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

2. இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையாக உள்ள வழக்குகளின் தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

3. இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் துவக்கி மூன்றாண்டுகால தொடர்பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து., சார்பில்.,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,
திருநெல்வேலி

பெறுநர்
திரு.கா. பெரும்படையன்பிள்ளை, இளநிலைஉதவியாளர்
வட்ட அலுவலகம், திருநெல்வேலி.

நகல்:பணிப்பதிவேடு

உபரி நகல்.